# பொதுக்காலம் 11ஆம் வாரம் - ஞாயிறு
# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இனியவர்களே! பொதுக்காலம் 11ஆம் வாரத்திற்கு பயணிக்க வந்துள்ள இவ்வேளையில், எல்லா முக்கியமான திருவிழாக்களையும் கொண்டாடி நிறைவு செய்துள்ள நாம், மாற்கு நற்செய்தியாளரின் புத்தகத்தில் இருந்து சிந்திக்க இருக்கிறோம்.

இறை இயேசுவின் இனிய நாமத்தில் அன்புடனே வாழ்த்துகின்றோம்.

தானாக முளைத்து வளரும் மரம் போல, நம் வாழ்வு இறைவனது கரத்தில் உள்ளது என்பதனை உணர்ந்து நம்மையே நாம் அர்ப்பணிப்போம்.

நாம் செய்ய வேண்டியது விதையை ஊன்ற வேண்டும். நீர்ப்பாய்ச்சி, உரமிட்டு, பாதுகாக்க வேண்டும். விளையச் செய்பவர் அவர் தாமே என்று காத்திருந்தால், மிகுந்த பலன் தந்து நம்மை பயன் கொடுக்கச் செய்வார்.

அனைவருக்கும் பயன் விளையச் செய்யும் வாழ்வு நம் வாழ்வாக வரம் வேண்டி பலியிலே பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை: எசேக்கியேல் 17:22-24

இறைவனுக்குரியவர்களே, இன்றைய முதல் வாசகம், ஆண்டவரால் நடப்படுகின்ற கேதுரு மரத்தைப் பற்றி பேசுகிறது. உயர்ந்தவற்றை தாழ்த்துபவராகவும், தாழ்ந்தவற்றை உயர்த்துபவராகவும் தாம் இருப்பதை எசேக்கியேல் இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் எடுத்துரைக்கின்றார். ஆண்டவரால் நட்டு வளர்க்கப்படும் மரத்தில் உறைவிடம் தேடும் பறவைகளாக வாழ வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 கொரிந்தியர் 5:6-10

இறைவனுக்குரியவர்களே, இன்றைய இரண்டாம் வாசகம், நமது இவ்வுலக வாழ்வின் நிலையாமையைப் பற்றி பேசுகிறது. இந்த நிலையற்ற உடலில் இருந்து நாம் பிரியும் காலத்தில், கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன் நிற்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க புனித பவுல் அழைப்பு விடுக்கிறார். நாம் செய்யும் நன்மைகளுக்கு கிறிஸ்துவிடம் கைம்மாறு பெறும் மக்களாக வாழும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

விளையச் செய்பவரும் பலன் கொடுக்கச் செய்பவருமான எம் இறைவா! திருஅவையை வழிநடத்தும் அன்பர்களை ஆசீர்வதித்து, அவர்களின் பணி வழியாக பிரபஞ்சம் நிறைந்த பலன் காண, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

விளையச் செய்பவரும் பலன் கொடுக்கச் செய்பவருமான எம் இறைவா! நாட்டை ஆள்வோர் மக்களின் வாழ்விலே அக்கறை கொண்டு, பயனள்ள நல்ல பல காரியங்களை முன்னெடுத்து, மக்களின் ஏற்றமான வாழ்வுக்கு வழிகாட்ட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

விளையச் செய்பவரும் பலன் கொடுக்கச் செய்பவருமான எம் இறைவா! நாங்கள் அனைவரும் உம்முடைய கை வேலைப்பாடே. நாங்கள் எதற்காக படைக்கப்பட்டோமோ அதன் பலனை தந்து வாழ்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

விளையச் செய்பவரும் பலன் கொடுக்கச் செய்பவருமான எம் இறைவா! படைப்பு எல்லாம் உம் அருளால் நிறைந்த பலன் கொடுத்து பணியாற்றும் போது, அந்த படைப்பை பாதுகாத்துக் கொள்ள, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

விளையச் செய்பவரும் பலன் கொடுக்கச் செய்பவருமான எம் இறைவா! பலரும் பயன் பெற எங்களது வாழ்வு, உம் அருளால், உமது திருவுளத்தை கண்டு பாவிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com